# JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU
# CC No.533 /2025

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : Lw3/ Pw2 |
| Name | : Sankar |
| Father/Husband's Name | : Kamalanadhan |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Age | : 45 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12.03.2026.

**Accused present.**

**முதல் விசாரணை:**

நான் தற்போது சென்னை பெருநகர மத்திய குற்ற பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 05.10.2022 அன்று காலை 11.00 மணியளவில் செங்கல்பட்டு தாலுக்கா காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியிலிருந்தபோது, எனக்கு கிடைத்த ரகசிய தகவல் கிடைத்ததின் பேரில், நான் மற்றும் என்னுடன் கங்காதரன் முதல் நிலை காவலர் 356, நாகராஜ் காவலர் 651 ஆகியோர்களுடன் ஒழலூர் கிராம ஏரிக்கரை ஓரம் உள்ள பொது கழிப்பிடம் அருகே காலை 11.00 மணியளவில் ரோந்து பணியிலிருந்தபோது, அருகிருந்த ரகசிய தகவலாளி அடையாளம் காட்ட, எதிரியை விசாரித்தபோது, அவர் முன்னுக்கு பின் முரணாக பதில் சொன்னதால், அவரை சோதனை செய்ய போவதாக சொல்லி மேற்படி, எதிரியிடம் நான் உன்ஊன சோதனை செய்வதற்கு சாட்சிகளாக குற்றவியல் நீதித்துறை நடுவர் அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர் முன் சோதனை செய்வதற்கு தேவையா என்று கேட்டபோது, அதற்கு எவ்வித ஆட்சேபணையும் தெரிவிக்காமல் நீங்களே சோதனை செய்யும்படி அனுமதி கொடுத்ததின் பேரில், அவரை சோதனை செய்த போது, அவர் பாக்கெட்டில் 50 கிராம் கஞ்சா வைத்திருந்தார். பொது மக்கள் சாட்சிகள் யாரும் அங்கு இல்லாததால், அதை நான் மேற்சொன்ன கங்காதரன் மற்றும் நாகராஜ் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து கைப்பற்றினேன்.

அதன் பிறகு எதிரியை கைது செய்து, கைப்பற்றப்பட்ட பொருள் மற்றும் எதிரியுடன் நிலையம் சேர்ந்து, எதிரி மீது நிலைய குற்ற எண்.491/2022 8(c),20(b)(ii)(A) NDPS act ன் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை **அதசா.ஆ2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர், எதிரியை உரிய பாராவசம் ஒப்படைத்து, இருநபர் ஜாமீனில் விடுவித்தேன். வழக்கு சொத்தை படிவம் 91 மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். அந்த படிவம் 91 **அதசா.ஆ3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த 50 கிராம் கஞ்சா **சா.பொ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் இவ்வழக்கில் எனது புலன் விசாரணையை முடித்து, மேற்சொன்ன பிரிவுகளின் கீழ் எதிரியின் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் காவலர்களுக்கு கொடுத்த உத்தரவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டதா என்றால் என் முன்னிலையில் தான் எதிரியை கைது செய்தார்கள். வாய்மொழி உத்தரவு தான் கொடுத்தேன். கைப்பற்றப்பட்ட கஞ்சாவை படிவம் 91 மூலம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன். கஞ்சாவை தடவியியல் துறைக்கு அனுப்பவில்லை. அதற்கு அவசியம் ஏற்படவில்லை. எதிரியிடமிருந்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட பொருள் கஞ்சாவின் புகைப்படமோ, வீடியோவோ எடுத்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. அதற்கு அவசியம் ஏற்படவில்லை. வழக்கிற்கு தேவையான அனைத்து ஆவணங்களும் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்தேன் என்றாலும், அவ்வாறு கைப்பற்றி இருந்தால், அதன் புகைப்படமோ, வீடியோவோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும், புள்ளிவிவர கணக்கிற்காக எதிரி மீது தவறான வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும், எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமுமில்லை என்றாலும் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Typewritten to my dictation in open
court read over to the witness in Tamil
in the presence of the accused and
admitted by the witness to be correct.

sd/- S.Sahaana
Judicial Magistrate No.II,
Chengalpattu